**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 30.05.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பாகிஸ்தானியத் தீவிரவாதிகள், இனி ஆட்டம் காட்ட முடியாது என்றும், எதிரிகளை இந்தியா, வலுவான முறையில் எதிர்கொள்ளும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து, அரசால் அமைக்கப் பட்ட, 7 அனைத்து கட்சிக் குழுக்கள், இந்தியாவின் நிலைப்பாடுகளை, பல்வேறு வெளிநாடுகளில் எடுத்துக் கூறி வருகின்றனர்.

இந்தியாவைப் பற்றிய இந்தியர்களின் பார்வையும், உலகின் பார்வையும், பெருமளவில் மாறி இருப்பதாக, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

2 நாள் பயணமாக மாஹே சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், புகழ்பெற்ற மையழி விடுதலைப் போராட்ட வீரர் உஸ்மான் மாஸ்டரின் மார்பளவு சிலையை திறந்து வைத்தார்.

---

*மோடி-கான்பூர் 1 (6)*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிற்பகல், உத்தரபிரதேஷ் மாநிலம் கான்பூரில், மொத்தம் 47 ஆயிரத்து 573 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு முக்கிய வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். கான்பூர் மெட்ரோ ரயில் திட்டத்தின் புதியப் பிரிவு ஒன்றையும் அவர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். பிரதமரின் கான்பூர் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*மோடி-கான்பூர் 2 (11)*

**(வாய்ஸ்)**

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்திய சகோதரிகளின் வலியையும், கோபத்தையும், உலகமே கண்டதாக பிரதமர் கூறினார். தீவிரவாத மையங்களை இந்தியா தாக்கி அழித்த போது நடுங்கிப் போன பாகிஸ்தான், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை முடிந்து விட்டதாக பொய்க் கனவில் இருந்து விடக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். பாகிஸ்தானில், அரசு ஆதரவுடனோ, அல்லது, தாங்களாகவோ செயல்படக் கூடிய எல்லாத் தீவிரவாதிகளும், இனி ஆட்டம் காட்ட முடியாது என்றும், எதிரிகளை இந்தியா, வலுவான முறையில் எதிர்கொள்ளும் என்றும் அவர் கூறினார். இந்தியப் படைகளின் துணிச்சல் மற்றும் வீரம் காரணமாகவே, சண்டை நிறுத்தம் கோரிக் கெஞ்சும் நிலை, பாகிஸ்தானுக்கு ஏற்பட்டதாக, பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

*மோடி-கான்பூர் 3 (8)*

முன்னதாக, பீகார் மாநிலம் காராக்காட்டில் இன்று காலை நடைபெற்ற விழாவில், மொத்தம் 48 ஆயிரத்து 520 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா, அயராது போராடி வருவதாகவும், இப்போராட்டம் ஒருபோதும் நிற்காது என்றும் கூறினார். நாட்டிற்கு எதிரான அச்சுறுத்தல், எல்லைக்கு அப்பால் இருந்து வந்தாலும், உள்ளே இருந்து வந்தாலும், அதை நசுக்கும் மனஉறுதி மாறாது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

------------------------

*அனைத்து கட்சி குழு 1 (14)*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றிய இந்தியாவின் தூதரகப் புறவீச்சு முயற்சிகளின் ஒரு பகுதியாக அரசால் அமைக்கப் பட்ட, 7 அனைத்து கட்சிக் குழுக்கள், தீவிரவாதத்தை ஒழிப்பதில் இந்தியாவிற்கு உள்ள

உறுதிபாட்டை, பல்வேறு வெளிநாடுகளில் உயர்நிலை பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறி வருகின்றனர்.

ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஞ்சய் ஜா தலைமையிலான குழுவினர், ஜப்பான், தென்கொரியா, மற்றும், சிங்கப்பூரை தொடர்ந்து, தற்போது இந்தோனேஷியாவில், இத்தகைய கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்தோனேஷியாவின் **நாத்லதுல் உலமா நிர்வாக வாரியம்** உள்ளிட்ட அமைப்புகள், தீவிரவாதம் பற்றிய இந்தியாவின் நிலைப்பாடுகளுக்கு ஆதரவு வெளியிட்டுள்ளன.

காங்கிரஸ் எம்பி திரு. சசிதரூர் தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர், கொலம்பியாவிலும், தேசியவாத காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினர்,

*அனைத்து கட்சி குழு* 2 (7)

தென்ஆப்ரிக்காவிலும், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பைஜெயந்த் பாண்டா தலைமையிலான குழுவினர், சவுதி அரேபியாவிலும், இதே போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டனர்.

திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர், தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்னும் இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதற்காக, இன்று லட்வியா சென்றடைந்துள்ளனர்.

**------------------------**

*மாநாடு-ஷெகாவத்* 1 (16)

இந்தியாவைப் பற்றிய இந்தியர்களின் பார்வையும், இந்தியாவைப் பற்றிய உலகின் பார்வையும், பெருமளவில் மாற்றம் கண்டுள்ளதாக, மத்திய கலாச்சாரம், மற்றும், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்தியத் தொழில்கள் கூட்டமைப்பின் வருடாந்தி வர்த்தக மாநாட்டில் உரையாற்றிய அவர், வரலாறு, மற்றும், கலாச்சார வளத்திற்கு புகழ்பெற்ற நாடு இந்தியா என்றும், இந்தியாவின் பாரம்பரிய ஞானத்தைக் கற்றுக் கொள்ள உலகெங்கிலும் இருந்து பலர் இந்தியாவிற்கு வருவதாகவும் கூறினார். சுற்றுலாத் துறைக்கான உள்கட்டமைப்பு வசதிகளுக்கு, அரசு அளித்து

வரும் ஆதரவு காரணமாக, இந்தியாவின் சுற்றுலாத் துறை தற்போது, புதிய உயரங்களுக்கு மேம்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். உலகிலேயே, சர்வதேச சுற்றுலாப் பயணிகளை விட, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் வாய்ப்பு அதிகமுள்ள நாடு இந்தியாதான் என்றும், சுற்றுலாத் துறையில் உருவாகி வரும் புரட்சிகரமான மாற்றங்களால், இத்துறையின் வளர்ச்சி பலமடங்கு அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*மாநாடு-ஷெகாவத்* 2 (8)

மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜு, இம்மாநாட்டில் பேசுகையில், இந்திய படைப்புத் திறன்சார் தொழில்நுட்பக் கழகத்தின் தற்காலிக வளாகம், அடுத்த மாதம் மும்பையில் திறக்கப்படும் என்றார். கடந்த மாதம் மும்பையில் நடைபெற்ற வேவ்ஸ் உச்சி மாநாட்டினால், இந்தியாவின் மென் திறன்கள் குறித்து, உலக அளவில் உற்சாகம் ஏற்பட்டுள்ளதாகவும், இம்மாநாட்டின் ஒருபகுதியாக நடைபெற்ற வேவ்ஸ் பஜாரில், ஆயிரத்து 300 கோடி ரூபாய் அளவிற்கு வரத்தக பேரங்கள் எட்டப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

-------------------------

*மாஹே-கைலாஷ்நாதன்* (14)

2 நாள் பயணமாக மாஹே சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், புகழ்பெற்ற மையழி விடுதலைப் போராட்ட வீரர் உஸ்மான் மாஸ்டரின் மார்பளவு சிலையை திறந்து வைத்தார். மாஹே உஸ்மான் அரசு உயர்நிலைப் பள்ளியில், இந்த சிலை நிறுவப் பட்டுள்ளது. இவ்விழாவை தொடர்ந்து, மாஹே கூட்டுறவு கல்வியியல் கல்லூரி, மற்றும், மாஹே கூட்டுறவு தொழில்நுட்பக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிலும் துணை நிலை ஆளுநர் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். முன்னதாக மாஹே மண்டல் நிர்வாக அதிகாரி அலுவலகத்தில், துணை நிலை ஆளுநர் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் திரு. ரமேஷ் பரம்பத், மண்டல நிர்வாக அதிகாரி திரு. மோகன்குமார், நகராட்சி ஆணையர் திரு. சதேந்திர சிங், மற்றும், பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். மாஹே பகுதியில், அரசுத் துறைகள் மூலமாக

அமலாகும் திட்டப் பணிகள் குறித்து, இக்கூட்டத்தில் மறு ஆய்வு செய்யப்பட்டது.

-------------------------

*புதுச்சேரி சட்டத் துறை* (6)

புதுச்சேரி அரசின் சட்டத் துறை, ஒப்பந்த அடிப்படையில் 2 ஆலோசகர் பதவிகளை நிரப்ப உத்தேசித்துள்ளது. மாநில அரசில், குறைந்தபட்சம் அமைச்சக உதவியாளர்களாக பணியாற்றி, ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள், ஜூன் 6ஆம் தேதிக்குள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும், கூடுதல் விவரங்களுக்கு, சட்டத் துறையின் இணைய தளத்தை அணுகலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*பரம் வீர் சக்ரா* 1 (7)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1962ஆம் ஆண்டு சீனா-இந்தியா போரின் போது அபாரத ◌துணிச்சல் மற்றும் வீரத்தை வெளிப்படுத்தி, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, மேஜர் தன்சிங் தாப்பா குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*பரம் வீர் சக்ரா* 2 (17)

**(வாய்ஸ்)**

1928ஆம் ஆண்டு ஹிமாச்சல பிரதேசத்தில் பிறந்தவரான மேஜர் தன்சிங் தாப்பா, 1949ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில், 8ஆவது கோர்க்கா ரைஃபிள் பிரிவில் சேர்ந்தவர் ஆவார். 1962ஆம் ஆண்டு சீனா-இந்தியா போரின் போது, லடாக் பகுதியில், பாங்காங் ஏரிக்கு அருகே, போர் முக்கியத்துவம் அதிகம் உள்ள சிரிஜாப்-1 ராணுவ நிலையில், C – கம்பெனி படைக் குழு ஒன்றின் தலைவராக, சுசூல் விமானப் படை தளத்தை பாதுகாக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருந்தார். அக்டோபர் 21ஆம் தேதியன்று, சீனப் படையினர் இந்த ராணுவ நிலையை, குண்டு

வீச்சு மற்றும் பீரங்கிகள் மூலம் தாக்கி, சிலை வயர்லெஸ் கருவிகளை சேதப்படுத்தியதுடன், அப்பகுதி முழுவதையும் தீயிட்டு கொளுத்தினர். இந்தியப் படையினரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்த நிலையிலும், மேஜர் தாப்பா மற்றும் அவரது படையினர், எதிரிப் படைகளின் அடுத்தடுத்த 2 தாக்குதல்களுக்கு வலுவாக பதிலடி கொடுத்து, எதிரிகளுக்கு கணிசமான இழப்புகளை ஏற்படுத்தினர். தங்கள் தரப்பிலும் இழப்புகள் அதிகரிப்பதை கண்டு அஞ்சாமல், இவர்கள் உறுதியாக போர்க் களத்தில் நின்ற போது, எதிரிகள் 3ஆவது முறையாக பீரங்கி வண்டிகளின் ஆதரவுடன் மீண்டும் தாக்கத் தொடங்கினர். ஆள் பலமும், ஆயுத பலமும்

*பரம் வீர் சக்ரா* 3 (7)

குறைந்து விட்ட நிலையிலும், இந்தியப் படையினர், எதிரிப் படைகளை தடுக்கும் முயற்சிகளை கைவிடவில்லை. ஆயினும் இறுதியில், ராணுவ நிலையை எதிரிகள் வசப்படுத்தியதால், மேஜர் தாப்பா, அகழிப் பள்ளத்தில் இருந்து ஆவேசமாக வெளிவந்து, எதிரிப் படைகளுடன் வீரமாக போராடி, எதிரிகளிடம் சிறைப்பட்டார். இத்தகைய அசாதாரணத் துணிச்சல், தலைமைத்துவம் மற்றும் வீரத்திற்காக, மேஜர் தன்சிங் தாப்பாவிற்கு, பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

-------------------------

*ஓய்வு (5)*

ஆகாஷ்வாணியில், 37 ஆண்டுகள் பொறியாளராக பணிபுரிந்து ஓய்வு பெறும் திரு. பி அபிமன்னனுக்கு, இன்று புதுச்சேரி வானொலி நிலையத்தில், பிரிவு உபச்சார விழா நடைபெற்றது. பொறியியல் பிரிவு துணை இயக்குநர் திருமதி லட்சுமி, நிகழ்ச்சிப் பிரிவுத் தலைவர் திரு. மயிலாடுதுரை தா.செந்தில் குமார், மற்றும், இதர அதிகாரிகளும், அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

-------------------------

*வானிலை* (8)

தமிழகத்திலும்,புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழைக்கும், கோவை, நெல்லை மாவட்டங்களின்

மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி, மற்றும், குமரி மாவட்டத்தில், மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்று வீச வாய்ப்புள்ள வங்கக் கடல் பகுதிகள் மற்றும் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என மீனவர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-------------------------

*ஐபிஎல்* (10)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்றிரவு 7.30 மணிக்கு, சண்டிகரில் நடைபெறும் எலிமினேட்டர் போட்டியில், குஜராத்-மும்பை அணிகள் மோத உள்ளன. இப்போட்டியில் வெற்றி பெறும் அணி, ஜூன் 1ஆம் தேதி நடைபெற உள்ள இரண்டாவது குவாலிஃபையர் போட்டியில், பஞ்சாப் அணியுடன் மோதும். நேற்று இரவு முல்லன்பூரில் நடைபெற்ற முதலாவது குவாலிஃபையர் போட்டியில், பெங்களூரு அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில், பஞ்சாப் அணிக்கு எதிராக வெற்றி பெற்று, இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. இரண்டாவது குவாலிஃபையர் போட்டியில் வெற்றி பெறும் அணி, ஜூன் 3ஆம் தேதி நடைபெற உள்ள இறுதிப் போட்டியில், பெங்களூரு அணியை எதிர்கொள்ளும்.

-------------------------

*காரைக்கால்* (6)

உலகப் புகையிலை ஒழிப்பு தினத்தை அனுசரிக்கும் விதமாக, காரைக்காலில், சுகாதாரத் துறை சார்பில் இன்று நடைபெற்ற, புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட துணை ஆட்சியர் திரு. அர்ஜுன் ராமகிருஷ்ணன், சுகாதாரத் துறை துணை இயக்குநர் திரு. சிவராஜ் குமார் ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர். அன்னை தெரெசா கல்லூரி மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

-------------------------

*நீட்-பிஜி* (8)

வரும் ஜூன் 15ஆம் தேதி நடைபெற உள்ள, முதுகலை மருத்துவர் மாணவர் சேர்க்கைககான நீட்-பிஜி நுழைவுத் தேர்வை, 2 ஷிஃப்டுகளாக அன்றி, ஒரே ஷிஃப்ட்டாக நடத்துமாறு, உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி

உள்ளது. 2 ஷிஃப்டுகளாக தேர்வை நடத்தினால், கேள்வித் தாளின் கடினத் தன்மை ஒரே மாதிரியாக இராது என்று நீதிபதி திரு. விக்ரம் நாத் தலைமையிலான அமர்வு, இன்று தனது உத்தரவில் கூறியது. நீட்-பிஜி தேர்வில், வெளிப்படைத் தன்மை இல்லை எனக் கூறி, தேர்வர்கள் சிலர் தாக்கல் செய்து இருந்த மனு மீது, நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பாகிஸ்தானியத் தீவிரவாதிகள், இனி ஆட்டம் காட்ட முடியாது என்றும், எதிரிகளை இந்தியா, வலுவான முறையில் எதிர்கொள்ளும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து, அரசால் அமைக்கப் பட்ட, 7 அனைத்து கட்சிக் குழுக்கள், இந்தியாவின் நிலைப்பாடுகளை, பல்வேறு வெளிநாடுகளில் எடுத்துக் கூறி வருகின்றனர்.

இந்தியாவைப் பற்றிய இந்தியர்களின் பார்வையும், உலகின் பார்வையும், பெருமளவில் மாறி இருப்பதாக, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

2 நாள் பயணமாக மாஹே சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், புகழ்பெற்ற **மையழி விடுதலைப் போராட்ட வீரர் உஸ்மான் மாஸ்டரின்** மார்பளவு சிலையை திறந்து வைத்தார்.